www.tamilarangam.net

இலங்கையர் சங்கம் - பொதுக்கூட்டம்

அழைப்பிதழ்

---

காலம்: 01.12 1990
12.00 மணி

இடம் : Gemeindehaus Beckacker
Samoastr. 16

5600 Wuppertal 2 (Oberbarmen)

நிகழ்ச்சி நிரல்

12.00 - 13.00: அங்கத்தவர், பங்குகொள்வோர் பதிவு.
மதிய போசனம்.

13.00 - 14.30: இன்றைய இலங்கை; வெளிநாட்டிலுள்ளோரின் பங்களிப்புகள்.

14.30 - 16.30: ஐக்கிய இலங்கை சாத்தியமானதா?

16.30 - 17.00: தேநீர் இடைவேளை

17.00 - 19.00: 10 வருட இலங்கை - விவரணப்படங்கள்.

19.00 - 19.30: இலங்கையர் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள்.

19.30 - 20.30: கலை நிகழ்ச்சிகள்.

அனைவரையும் அன்புடன் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்குமாறு அழைக்கின்றோம்.

- இலங்கையர் சங்கம்

Sri Lanka Verein, Daiserstr. 9, 8 München 7o
Tel.: 089 - 772696

குறிப்பு: நிகழ்ச்சியில் பங்குகொள்வோருக்கான கூட்டச் செலவு 8,- டி.எம்.

---

இவ் அழைப்பிதழை பிரதி செய்து உங்கள் நண்பர்களுக்கும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ශ්‍රී ලංකා සංගමය
# இலங்கையர் சங்கம்

## අපි අප ගැනම.

උපන් බිමෙන් ඈත, යුරෝපීය රටක ජීවත්වන ශ්‍රී ලාංකිකයිනට පොදුවූ ප්‍රශ්න සහ අවශ්‍යතාවයන් රාශියකි. සාමූහිකව මෙම ප්‍රශ්න විසදා ගැනීම, නැතිනම් එම අවශ්‍යතාවයන් ඉටුකර ගැනීම සදහා ඒක්සත් ශ්‍රී ලංකා සංගමයක අවශ්‍යතාවය ඇතිවිය, මෙ හේතුවෙන් ජර්මන් ශ්‍රී ලංකා සංගමය බිහිවිය.

කාලාන්තරයක් තිස්සේ විවිධ ප්‍රදේශවල විවිධ පුද්ගලයින්ගේ සාකච්ඡා සහ අදහස් හුවමාරුවක ප්‍රතිඵලයක්ලෙස 1988 පෙබරවාරි මාසයේ ජාති භේදයකින් තොරව ශ්‍රී ලාංකිකයන් වශයෙන් ප්‍රථම වරට අපගේ එකතුවක් ඇතිවිය.

සියළු වර්ග වාදයන්, ආගම් හා පාලන පක්ෂයට හෝ සංවිධානයකට අයත් නොවන් නාවූද මෙම සවාධීන සංවිධානය අප ශ්‍රී ලංකාකිකයින්ගේ එකතුවකි.

තුන් මසකට වරක් ජර්මනියේ විවිධ ප්‍රදේශවලදී අපි (සංගමය) රැස්වී ඒ, ඒ ප්‍රාදේශීය ලංකික ජනතාවන් දැනහදුන ගනිමින්, අපට අදාලවූ ප්‍රශ්නයන් සාකච්ඡා කරන්නෙමු.

## எம்மைப்பற்றி...

தாய் மண்ணிலிருந்து மிகத் தொலைவிலிருக்கும் ஐரோப்பாவில், வாழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையர்களுடைய பிரச்சனைகளும், தேவைகளும் பலவகைப்படுகின்றன. பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான ஒரு அமைப்பு என்ற வகையிலேயே இலங்கையர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்கு ஜேர்மனியின் பல பகுதிகளிலிலும் பரந்து வாழும் பலருடன் கலந்தாலோசித்து, கருத்துப் பரிமாறிக்கொண்டதன் விளைவாக 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதன்முறையாக இன பேதம் கடந்து கருத்துப்பரிமாறிக்கொண்ட ஒரு ஒருங்கிணைவு கூட்டம் நடைபெற்றது.

இது இன, மத வேறுபாடுகளைக் கடந்து, அதேசமயம் எந்த ஒரு அரசியல் கட்சி சார்பற்று, இலங்கையர் என்ற ரீதியில் ஒற்றுமையை வலியுறுத்தி அமைக்கப்பட்ட ஒரு சுதந்திரமான அமைப்பாகும்.

மூன்று மாதங்களுக்கொருமுறை மேற்குஜேர்மனியின் வெவ்வேறு நகரங்களில் இலங்கையர் சங்கத்தின் கூட்டங்களை நடாத்துவதன்மூலம், அந்நகரங்களில் வாழும் இலங்கையர்களைச் சந்தித்து எம்மிடையேயுள்ள பிரச்சனைகளைப்பற்றி கலந்துரையாடக் கூடியதாகவுள்ளது.

**ප්‍රවෘත්ති ලිපිය 1 செய்திக்கடிதம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

මෙම සංගමයේ පළමුවැනි රැස්වීම බොන් නගරයේදීද. ඉන්පසු මියුනික්, හම්බර්ග්, ප්‍රයිබර්ග් සහ ප්‍රෑන්ක්පර්ට යන නගරයන්හි පවත්වන ලදී.

1990 මැයි මස 26 වැනි දින "Frankfurt" නගරයේදී රැස්වූ මහා සභාව විසින් ඉදිරි වර්ශය සඳහා විශේෂ නිල නාමයකින් තොරව සෑම දෙනටම සමාන බලතල ඇති 14 දෙනෙකුගෙන් සමන් විත නිලධාර් මංඩලයක් තොරා ගන්නා ලදී.

## අප සංගමය විසින් ගන්නා ලද ක්‍රියා මාර්ගයන් මෙසේය.

* මිනිස් අයිතින් ආරක්‍ෂා කරන මෙන් ඉල්ලා සිටිමින් ශ්‍රී ලංකාවෙ ජනාධිපතිට ලිපියක් යැවීම.

## තානාපති කාර්යාලය ඉදිරිපිට විරෝධය ප්‍රකාශ කිරීම

* 1990 පෙබරවාර් 5වැනි සඳුදා, ශ්‍රී ලංකාවෙ කෙරෙන සියළුම ආකාරයේ මිනිස් ඝාතනයන් නතර කරන ලෙසට බල කරමින් බොන් ශ්‍රී ලංකා තානාපති කාර්යාලය ඉදිරිපිට විරෝධය ප්‍රකාශ කිරීම සහ තානාපතිණිය මාර්ගයෙන් ජනාධිපති වෙත ලිපියක් යැවීම.
* ශ්‍රී ලංකිකයන්වන වතුකම්කරුවන් ලක්‍ෂයක් රටින් පිටුවහල් කිරීමට විරෝධය ප්‍රකාශකරමින් ශ්‍රී ලංකාවේ ජනාධිපතිවෙත ලිපියක් යැවීම.

## උපවාසයක්

* 1990ජූලි 13 දින බොන් නගරයේදී, රජය සහ උතුරේ විමුක්තිකොටි සංවිධානය සමග කෙරෙන යුද්ධයට විරෝධය ප්‍රකාශ කරමින් ඒක් දිනක උපවාසයක් සහ ජනාධිපති වෙත පෙත්සමක් අත්සන් කිරීම.

3වෙනි පිටුවට

இலங்கையர்சங்கத்தின் முதற்கூட்டம் பொன்நகரிலும், மற்றைய கூட்டங்கள் முன்சன், ஹம்பேர்க், பிறைபேர்க், பிராங்பேர்ட் ஆகிய நகரங்களிலும் நடைபெற்றன.

1990 மேமாதம் 26ம் திகதி பிரங்பார்ட் நகரில் நடைபெற்ற இலங்கையர்சங்கப் பொதுக்கூட்டத்தில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 14 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

## இலங்கையர்சங்கத்தின் இதுவரையிலான நடவடிக்கைகள்.

* இலங்கையில் மனிதஉரிமைகளைப் பாதுகாக்கவேண்டி இலங்கை ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது.

## துதரகத்திற்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கை

* 1990 பெப்ரவரிமாதம் 5ம் திகதி, திங்கட்கிழமை இலங்கையில் நடைபெறுகின்ற மனிதகொலைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரி பொன்நகரிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையொன்று நடைபெற்றது. அந்நடவடிக்கையின்போது மேற்கு ஜேர்மனியிலுள்ள இலங்கை தூதுவர் மூலமாக ஜனாதிபதிக்கு எதிர்ப்புமனுவொன்று கையளிக்கப்பட்டது.

* இலங்கை பிரஜைகளான மலையகமக்களை நாடுகடத்துவதை எதிர்த்து இலங்கை ஜனாதிபதிக்கு ஓர் கடிதம் அனுப்பப்பட்டது.

## உண்ணாவிரதம்

* 1990ம் ஆண்டு யூலைமாதம் 13ம் திகதி பொன்நகரில் இலங்கையரசக்கும்- விடுதலை புலிகளுக்குமிடையிலான யுத்ததின்போது பொதுமக்கள் பாதிக்கப்படுவதை எதிர்த்து

3ம் பக்கம் பார்க்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ශ්‍රී ලංකා සංගමය

බටහිර ජර්මනිය

අරමුණු.

* ශ්‍රී ලංකාවේ සියළුම ජාතීන් අතර සුහදතාවය සහ සම්බන්දතාවය ගොඩනැගීම සහ තහවුරුකිරීම.

* ශ්‍රී ලංකාවේ මිනිස්අයිතීන් නැවත ගොඩ නැගීම සහ රැකගැනීමට ඇප කැපවීම.

* මවබිමේ ඇති ජනවාර්ගික ප්‍රශ්නයට දේශපාලන විසඳුමක් ගෙන ඒම සඳහා සාකච්ඡා පැවැත්වීම.

* ශ්‍රී ලංකාවේ පවතින දේශපාලන, සමාජ සහ ආර්ථික ප්‍රශ්න ගැන සාකච්ඡාවකට එළඹීම.

* දේශිය හා විදේශිය ජන සංවිධාන සහ මිනිස් අයිතීන් වෙනුවෙන් කටයුතු කරන සංවිධාන සමග සම්බන්ධවී කටයුතු කිරීම.

* මෙහි වාසය කරන ලාංකිකයන්ගේ සංස්කෘතික අවශ්‍යතාවයන් සහ හැකියාවන් වැඩිදියුණු කරගැනීමට හා ඉටුකරගැනීමට කටයුතු කිරීම.

# இலங்கையர் சங்கம்

மேற்கு ஜேர்மனி

## நோக்கங்கள்

* இலங்கையில் வாழும் சகல இனத்தவர்களிடேயேயும் நட்புறவை வளர்த்தல்.

* இலங்கையில் மனித உரிமைகளை மீளக்கட்டி எழுப்புவதற்கும் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

* இலங்கையின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வினை நோக்கிய கலந்துரையாடல்களை நடத்துதல்.

* இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் சம்பந்தமான கலந்துரையாடல்களை நடத்துதல்.

* இலங்கையிலும் வெளிநாடுகளிலுமிருக்கும் சமூக ஸ்தாபனங்கள், மனிதஉரிமைச்சங்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதைப் பேணுதல்.

* வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் கலைத்திறமைகளுக்கும் ஆர்வத்துக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

---

දෙවෙනි පිටුව හා සම්බන්දය.

இரண்டாம் பக்கத் தொடர்ச்சி.

## මියුනික් නගරයේදී:

1990 ජූලි 19 වෙනිදින මියුනික් නගරයේ දීද ඉහතකී තේමාව යටතේම විරෝධය පෑමක් කල අතර එදින සැන්දෑවේදී ශ්‍රී ලංකාව පිළිබඳව සම්මන්ත්‍රණයක්ද පැවැත්වුනි. එයද සංවිධානය කර තිබුණේ ශ්‍රී ලංකා සංගමය මගිනි.

ஒருநாள் உண்ணாவிரதம் நடைபெற்றது. அவ்வுண்ணவிரதத்தின்போது அழிவுகளை நிறுத்துமாறுகோரி தமிழ், சிங்களம், ஜேர்மன் ஆகிய மொழிகளில் துண்டுப்பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டன. ஜனாதிபதிக்கும், மேற்குஜேர்மன் வெளிவிவகாரஅமைச்சருக்கும் அனுப்பபுவதற்கென கீழ்காணும் கோரிக்கைகளைக்கொண்ட இரு மனுக்களில் பொதுமக்களிடம் கையெழுத்துக்கள் பெறப்பட்டன. தொடர் நடவடிக்கையாக முன்சன் நகரில் தகவல் நடுவமொன்று நடாத்தப்பட்டு, அங்கும் மேற் கூறப்பட்ட மனுக்களில் கையெழுத்துக்கள் பெறப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ශ්‍රී ලංකාවේ ජනාධිපතිට ඉදිරිපත් කළ ඉල්ලීම්.

- ඇල්.ටී.ටී.ඊ සහ රජය අතර කෙරෙන සටන් අවසන්කිරීම.
- සාකච්ඡා මාර්ගයෙන් පවතින ප්‍රශ්න වලට දේශපාලන විසඳුම් යෙදීම.
- ශ්‍රීලංකාවේ දකුණේ සහ උතුකරයේ කෙරෙන දේශපාලන ඝාතනයන් වහාම නැවැත්වීම.
- තුවාල කරුවනට, අනාථයනට සහ යුද්ධයෙන් පීඩාවිඳින්නන්ට වහා සහන සැලසීම.
- ආහාරපාන සහ බෙහෙත් ද්‍රව්‍ය ප්‍රවාහනය නතර කිරීමට පනවා ඇති බාධක ඉවත් කිරීම.
- රතුකුරුස සන්විධානය, ජාතියන්තර සමාසන්ව්‍රදනය(ai), අනෙකුත් ආධාර සහ මිනිස් අයිතිවාසිකම ආරක්‍ෂා කිරීමේ සන්විදධානයන්ගේ සාමාජකයිනට අදාල පලාත්වලට ඇතුලුවීමට අවසර ලබාදීම.
- වතුකම්කරුවන් සග ඔවුන්ගේ පවුල් බලෙන් රටින් පිටුවහල් කිරීම වහාම නතර කිරීම.

ஜனாதிபதிக்கு அனுப்பட்ட மனுவிலிருந்த கோரிக்கைகள்.

1. மக்களுக்கு இழப்புகளையும். அழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இம்மோதல்கள் இலங்கையாசினாலும, எல்.ரி.ரி.ஈ. யினாலும் நிறுத்தப்படவேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல தீர்வு காணப்படவேண்டும்.

2. தென்னிலங்கையிலும், மலையகத்திலும் அரசினால் நடத்தப்படும் படுகொலைகள் உடனே நிறுத்தப்படவேண்டும்.

3. அகதிகளுக்கும், காயமடைந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

4. உணவு, மருத்துவ, போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டு, அனைத்து விநியோகங்களும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

5. கைதுகள் நிறுத்தப்படுவதுடன், கைதானவரகள் உடனே விடுவிக்கபபடவேணடும.

6. செஞ்சிலுவைச் சங்கம. சரவதேச மனனிப்புச்சபை, மனித உரிமைச் சஙகங்கள் ஆகியன பாதிக்கபபட்ட இடஙகளுககுச் சென்று பார்வையிடவம. பாதிக்கப்பட்டவர்களைச் சந்திதது நிவாரணங்கள வழங்கவும அனுமதி வழங்கப்படவேண்டும்.

7. மலையக மக்களை கட்டாயமாக நாடு கடததுவதை கைவிடவேண்டும்

---

அපේ ලිපිනය: எமது விலாசம்:

*SRI LANKA VEREIN*
*Dritte Welt Cafe*
*Daiserstr. 9,*
*8000 München 71.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழிவுகளை நிறுத்துக

இனங்களுக்கிடையில் சமாதானத்தைக் கொண்டுவருவதாகவும், பேச்சுவார்த்தைகள் மூலமாகவே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள விரும்புவதாகவும், தமக்கிடையேயான பகைமைகளை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளதாகவும் பரஸ்பரம் கூறிக்கொண்ட இலங்கையரசும், எல்.ரி.ரி.ஈ.யும் திரைமறைவுப் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டன. அமைதிநிலை திரும்பிவிட்டதாகவும், நிர்வாகங்கள் ஒழுங்காக நடப்பதாகவும் இருதரப்பும் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் பிரச்சாரங்களை மேற்கொண்டன.

ஆனால் நாட்டில் நடக்கும் கொலைகளும், அழிவுச் செயல்களும் ஒருபோதும் நிறுத்தப்படவேயில்லை. இலங்கைஅரசும், எல்.ரி.ரி.ஈ.யும் தமது அரசியலுக்கு எதிரானவர்களையும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இயங்குபவர்களையும் கடத்தியும், சிறையிலடைத்தும், கொலை செய்தும் வருகின்றன.

இந்நிலையில் ஜூன் மாதம் 12ஆம் திகதி இலங்கை அரசபடைகளுக்கும், எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையில் திடீரென ஏற்பட்ட மோதலில் இன்றுவரை ஆயிரக்கணக்கான மக்கள் வெட்டியும், தீ மூட்டியும், குண்டு வீசியும் கொல்லப்பட்டுள்ளார்கள். பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளையிழந்தும் அகதிகளாக உணவு, மருத்துவ சிகிச்சை போன்ற எந்தவித நிவாரணங்களுமின்றி அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் கிழக்கு மாகாணம் தற்போது அரசபடைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு இளைஞர்கள் தீ மூட்டி எரிக்கப்படுவதும், நாள்தோறும் நூற்றுக்கணக்கில் கடத்தப்படுவதும் தொடர்கிறது.

எல்.ரி.ரி.ஈ.யினால் எதுமறியாத சிறுபிள்ளைகள் மோதல்களுக்கு அனுப்பப்பட்டுப் பலியாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசின் போர் விமானத் தாக்குதல்களால் வைத்தியசாலைகள், பாடசாலைகள், கன்னியர் மடங்கள், அனாதை விடுதிகள் போன்றனவும் முற்றாகத் தகர்க்கப்பட்டுள்ளன.

மின்சார, உணவு விநியோகமும், போக்குவரத்துச் சேவையும் இலங்கை அரசால் தடுக்கப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்களின் விபரம், காயமடைந்தவர்களின் நிலை, அகதிகளின் விபரம் போன்றன வெளியே தெரியவராதபடி அரசால் மூடிமறைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஏனைய இயக்கங்கள் தமது அரசியல் எதிரியான எல்.ரி.ரி.ஈ.யைப் பழிவாங்குவதற்காக அரசின் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு, மக்களுக்கு எதிராக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

தற்போதைய வடக்கு, கிழக்கு நிலைமைகளைப் பயன்படுத்தி அரச ஆதரவு ஆயுதபாணிகளால் மலையக மக்கள் கடத்திக் கொல்லப்பட்டு வருவதுடன், வயல்களும், உடைமைகளும் தீ மூட்டி எரிக்கப்படுகின்றன.

இந் நிலைமைகளில் இலங்கை அரசாலும், இயக்கங்களாலும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டும், அகதிகளாகத் துன்பப்பட்டும், அழிவுகளையும், இழப்புகளையும் நேருக்கு நேர் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இலங்கை மக்கள் சார்பாக பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து 13.07.90 அன்று ஒருநாள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கிறோம்.

<u>கோரிக்கைகள்</u>

01. மக்களுக்கு இழப்புகளையும், அழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இம் மோதல்கள் இலங்கையரசினாலும், எல்.ரி.ரி.ஈ.யினாலும் நிறுத்தப்படவேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.

02. தென்னிலங்கையிலும், மலையகத்திலும் அரசினால் நடத்தப்படும் படுகொலைகள் உடனே நிறுத்தப்படவேண்டும்.

03. அகதிகளுக்கும், காயமடைந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடனடியாக நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

04. உணவு. மருத்துவ, போக்குவரத்துத் தடைகள் நீக்கப்பட்டு, அனைத்து விநியோகங்களும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும்.

05. கைதுகள் நிறுத்தப்படுவதுடன், கைதானவர்கள் உடனே விடுவிக்கப்படவேண்டும்.

06. செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைச் சங்கங்கள் ஆகியன பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிடவும், பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நிவாரணங்கள் வழங்கவும் அனுமதி வழங்கப்படவேண்டும்.

அத்துடன்,

07. மலையக மக்களை கட்டாயமாக நாடு கடத்துவதை கைவிடவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கு ஜேர்மன் மக்களிடமும், மேற்கு ஜேர்மனியில் இருக்கும் மனித உரிமைச் சங்கங்களிடமும் நாம் கீழ் வரும் வேண்டுகோள்களை விடுக்கின்றோம்.

01. இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளால் கிடைக்கும் வருமானத்தில் இலங்கை அரசு ஆயுதங்கள் வாங்கியும், கூலிப்படைகளுக்குச் சம்பளம் கொடுத்தும் இலங்கையிலுள்ள அனைத்து மக்கள் மீதும் ஒடுக்குமுறையை மேற்கொண்டு வருகிறது. இதைத் தவிர்க்கு முகமாக இலங்கைக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

02. இலங்கையரசுக்கு வழங்கப்படும் நன்கொடைகளும், கடன் உதவிகளும் மக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிக்கவும், அரசு தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவுமே பயன்படுத்தப்படுகிறது. எனவே ஜேர்மனி அரசாங்கமோ, வேறு நிறுவனங்களோ, உலக வங்கியோ இலங்கையரசுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்க உதவுங்கள்.

உங்கள் பங்களிப்புகளை எதிர்பார்க்கும்,

இலங்கையர் சங்கம்.

Sri Lanka Verein
Dritte Welt Cafe
Daiserstr. 9

8000 München 71

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையர் சங்கம் - பொதுக்கூட்டம்

## அழைப்பிதழ்

காலம்: 01.12 1990
12.00 மணி

இடம் : Gemeindehaus Beckacker
Samoastr. 16

5600 Wuppertal 2 (Oberbarmen)

<u>நிகழ்ச்சி நிரல்</u>

12.00 - 13.00: அங்கத்தவர், பங்குகொள்வோர் பதிவு.
மதிய போசனம்.

13.00 - 14.30: இன்றைய இலங்கை; வெளிநாட்டிலுள்ளோரின் பங்களிப்புகள்.

14.30 - 16.30: ஐக்கிய இலங்கை சாத்தியமானதா?

16.30 - 17.00: தேநீர் இடைவேளை

17.00 - 19.00: 10 வருட இலங்கை - விவரணப்படங்கள்.

19.00 - 19.30: இலங்கையர் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள்.

19.30 - 20.30: கலை நிகழ்ச்சிகள்.

அனைவரையும் அன்புடன் நிகழ்ச்சிகளில் பங்கெடுக்குமாறு அழைக்கின்றோம்.

- இலங்கையர் சங்கம்

Sri Lanka Verein, Daiserstr. 9, 8 München 7o

Tel.: o89 - 772696

குறிப்பு: நிகழ்ச்சியில் பங்குகொள்வோருக்கான கூட்டச் செலவு 8,- டி.எம்.

---

இவ் அழைப்பிதழை பிரதி செய்து உங்கள் நண்பர்களுக்கும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**SRI LANKA VEREIN**
***in der***
***Bundesrepublik Deutschland.***

## *Ziel und Zweck des Vereins:*

* Förderung der Freundschft und Verständigung zwischen Srilankische bevölkern.
* Öffentlichkeitsarbeit, z.B. Aktionen, zur Wiederherstellung und Bewahrung der Menschenrechte in Sri Lanka.
* Gemeinsame Diskussionsprozesse anregen und förden, die zu einer politischen Lösung des ethnischen konflikts führen .
* Aufzeigen der wirtschaftlichen, sozialen und politischen Ursachen der Unterentwicklung Sri Lankas.
* Aufbau und Pflege der Kontakte zu sozialen Bewegungen, zu Menschenrechtsorganisationen und zu gesellschaftlichen Institutionen in Sri Lanka und im Ausland.
* Unterstützung und Förderung der künstlerischen Fähigkeiten der im Ausland lebenden Sri LankanerInnen.

*****

*SRI LANKA VEREIN*
*Dritte Welt Cafe*
*Daiserstr. 9,*
*8000 MÜNCHEN 70*
*Tel: 089/772696*

# இலங்கையர் சங்கம்

மேற்கு ஜேர்மனி

## நோக்கங்கள்

* இலங்கையில் வாழும் சகல இனத்தவர்களிடேயேயும் நட்புறவை வளர்த்தல்.
* இலங்கையில் மனித உரிமைகளை மீளக்கட்டி எழுப்புவதற்கும் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.
* இலங்கையின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வினை நோக்கிய கலந்துரையாடல்களை நடத்துதல்.
* இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் சம்பந்தமான கலந்துரையாடல்களை நடத்துதல்.
* இலங்கையிலும் வெளிநாடுகளிலுமிருக்கும் சமூக ஸ்தாபனங்கள், மனிதஉரிமைச்சங்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதைப் பேணுதல்.
* வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் கலைத்திறமைகளுக்கும் ஆர்வத்துக்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

சகல தொடர்புகளுக்கும்:

*SRI LANKA VEREIN*
*Dritte Welt Cafe*
*Daiserstr. 9,*
*8000 MÜNCHEN 70*
*Tel: 089/772696*

# ශ්‍රී ලංකා සංගමය

බටහිර ජර්මනිය

අරමුණු.

* ශ්‍රී ලංකාවේ සියළුම ජාතීන් අතර සුහදතාවය සහ සම්බන්දතාවය ගොඩනැගීම සහ තහවුරුකරීම.
* ශ්‍රී ලංකාවේ මිනිස්අයිතීන් නැවත ගොඩනැගීම සහ රැකගැනීමට අප කැපවීම.
* මවබිමේ ඇති ජනවාර්ගික ප්‍රශ්නයට දේශපාලන විසඳුමක් ගෙන ඒම සඳහා සාකච්චා පැවැත්වීම.
* ශ්‍රී ලංකාවේ පවතින දේශපාලන, සමාජ සහ ආර්ථික ප්‍රශ්න ගැන සාකච්චාවකට එළඹීම.
* දේශීය හා විදේශීය ජන සංවිධාන සහ මිනිස් අයිතීන් වෙනුවෙන් කටයුතු කරන සංවිධාන සමග සම්බන්ධවී කටයුතු කරීම.
* මෙහි වාසය කරන ලාංකිකයින්ගේ සංස්කෘතික අවශ්‍යතාවයන් සහ හැකියාවන් වැඩිදියුණු කරගැනීමට හා ඉටුකරගැනීමට කටයුතු කිරීම.

*SRI LANKA VEREIN*
*Dritte Welt Cafe*
*Daiserstr. 9,*
*8000 MÜNCHEN 70*
*Tel: 089/772696*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

සාමාජික මුදල: මසකට DM 5,-. අවුරුද්දකට DM 50,-. රක්ෂා නොවැති අය සහ එක පවුලේ සාමාජිකයින්ට විශේෂ යැලකිලි.

සාමාජක මුදල් පහත සඳහන් ගිණුම් අංකයට යොමු කරන්න.

**அங்கத்துவப்பணம்: ஒரு மாதத்திற்கு 5,- டி.எம். முன் பணமாக வருடத்திற்கு 50,- செலுத்தலாம். வேலையற்றோர், ஒரு குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோருக்கு சலுகைகள் உண்டு.**

**அங்கத்துவப்பணத்தை கீழ்கண்ட வங்கிக் கணக்குக்கு அனுப்பிவைக்கலாம்.**

Die Mitgliedsbeitrag beträgt DM. 5,- pro monat oder DM 50,- pro Jahr im voraus. Ermässigungen sind auf antrag beim vorstand möglich.

Bankverbindung:

**Gunadasa Weiss,**
**Konto nr: 4985 91-801,**
**Postgiroamt: München**
**BLZ 700 100 80**

.................................................................................................................................................

අයදුම් පත්‍රය அங்கத்துவ விண்ப்பப்படிவம் Antrag auf Mitgliedschaft

නම /பெயர்/Name.............................................................................

ලිපිනය/விலாசம்/Adresse..........................................................................

.......................................................................

.......................................................................

සාමාජික මුදල/அங்கத்துவப்பணம்/Mitgliedsbeitrag..................

.....................................................

අත්සන/ ஒப்பம்/ unterschrift

දිනය/திகதி/Datum.............

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SLV INFO

Yr:1 15.07.1991 Nr:1/91

# MASSAKER IN SRI LANKA

## 185 Zivilisten sind durch srilankanische Soldaten ermordet und verbrannt worden.

*"Gewaltlosigkeit ist unsere Lebensphilosophie. Wir wollen unsere Probleme durch Gespräche miteinander lösen. Ich glaube nicht an die Waffengewalt....."*
*"Dieser Krieg richtet sich nicht gegen die Tamilen... er ist gegen die Tigers....."*

Dies sind Zitate des srilankanischen Präsidenten Premadasa, die auf öffentlichen Versammlungen und in Zeitungen von ihm immer wieder verwendet werden. Aber der fortlaufende Terrorismus der srilankanischen Regierung widerspricht diesen Argumenten.

Einer der schlimmsten Staatsterroristischen Anschläge ist das kürzlich verübte Massaker an den tamilischen Zivilisten in Kokodichcholai ( Ein Dorf in der Ostprovinz Sri Lankas)

Tamilen und Moslems bilden die Mehrheit der Bevölkerung in der Ostprovinz Sri Lankas. Um diese Provinz von der Nordprovinz ( wo Tamilen die Mehrheit bilden) zu trennen und die ursprüngliche Mehrheit der tamilischen und muslimischen Bevölkerung in eine Minderheit zu drängen, wird durch staatliche Hilfe in der Ostprovinz die Ansiedlung von Singhalesen gefördert. Dies wurde von allen bisherigen srilankanischen Regierungen der letzten Jahre gefördert. Dieser Kolonialisierungsplan und der Bevölkerungsmord an srilankanischen Tamilen waren Schwerpunkte der Progrome der srilankanischen Regierung in der Ostprovinz . Indem die Tamilen getötet und als Flüchtlinge verjagt wurden plante die chauvinistische Regierung ihre Herrschaft in dieser Region auszuweiten.
Die Massaker und Verletzungen der Menschenrechte im Osten von Sri Lanka sind im Gegensatz zu denen im Norden und Süden Sri Lankas der Weltöffentlichkeit kaum bekannt. Dadurch kann gie srilankanische Regierung ihre chauvinistischen Aktivitäten fortführen.
Am 13.06.91 ereignete sich das Massaker in Kokodichcholai. Als ein Racheakt für den Tod von drei Armeeangehörigen, die durch Minen der Tigers getötet wurden, ermordete die Armee innerhalb eines Tages 185 Angehörige der tamilischen Zivilbevölkerung.

Hausfrauen bei ihrer Hausarbeit, Schüler in der Schule, Arbeiter bei der Arbeit und Passanten auf der Straße wurden - nur weil sie Tamilen sind - kaltblütig von der srilankanischen Armee erschossen, erstochen oder lebendig verbrant. Einige Tamilen, die Schutz in einer Reismühle suchten, wurden auf der Stelle erschossen. Lehrerinnen und Schülerinnen wurden von der Armee sexuell mißbraucht. Die Hälfte der Toten waren Frauen und Kinder.
Mitarbeiter des Internationalen Roten Kreuzes, die den Verletzten

Forts. S.6



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ශ්‍රී ලංකාවේ මිනිස් ඝාතන

## ශ්‍රී ලංකා සොල්දාදුවන් විසින් ගම්වැසියන් 185 දෙනෙක් මරා දමති.

"අවිහිංසාව අපේ ප්‍රතිපත්තියයි..... අපි අපේ ප්‍රශ්න සාකච්ඡා කිරීමෙන් විසදා ගනිමු..... මා ආයුධ මත විශ්වාසය නොතබමි...... වර්තමාන යුද්ධය ද්‍රවිඩ ජනතාවට විරුද්ධව කෙරෙන සටනක් නොවේ...... එය කොටි සංවිධානයට විරුද්ධව කෙරෙන සටනකි....."

ඉහත සදහන් වදන් පාඨ ප්‍රසිද්ධ රැස්වීම් සහ ප්‍රවෘර්ති පත්‍ර ප්‍රකාශණ වලදි ජනාධිපති ප්‍රේමදාසගේ මුවින් පිටවුනු ඒවාය. නමුත් ශ්‍රීලංකා රජය විසින් නොකඩවා කරගෙන යන භයානක මිණීමැරුම් මේ ප්‍රකාශණ වලට විරුද්ධ ස්වභාවයක් පෙන්නුම් කරයි.

ශ්‍රී ලංකාවේ නැගෙනහිර පලාතේ , කොක්කඩිචෝලෙයි නැමැති ග්‍රාමයේ අහිංසක ද්‍රවිඩ ගම්වාසීන් මරාදැමීම , මෑතකදි ශ්‍රීලංකා රජය විසින් මෙහෙයවන ලද දරුණුම ඝණයේ ඝාතනයක් ලෙස හැදින්විය හැක. නැගෙනහිර පලාතේ ජනගහනයෙන් වැඩි සංඛ්‍යාවක් දෙමළ සහ මුස්ලිම් ජනයායි. දෙමළ ජනයා වැඩිම සංඛ්‍යාවක් සිටින උතුරු ප්‍රදේශයෙන් නැගෙනහිර ප්‍රදේශය වෙන් කිරීම සදහාද ,මෙම ප්‍රදෙශයේ වසන ගම්වාසීන් සලුජනතාවක් කිරීම සදහාද , දෙමළ ජනයා සිටින ප්‍රදේශවල සිංහල ජනයා පදිංචි කරවීම වසර ගනනාවක් තිස්සේ ශ්‍රීලංකා රජය විසින් කරගෙන යන ලද්දකි. මෙම පදිංචිකරවීමෙ සැලසුම ක්‍රියාත්මක කිරීමට සහ දෙමළ ජනතාව පීඩනය කිරීමටද නැගෙනහිර ප්‍රදේශය ශ්‍රීලංකා රජයේ ප්‍රධාන ඉලක්කය විය. දෙමළ ජනතාව මැරීමෙන් සහ අනාථයින් ලෙස පලවා හැරීමෙන් දේශානුරාගික රජය විසින් මෙම ප්‍රදේශවාසීන් වෙත තම බලපෑම් එල්ල කර ඇත.

ශ්‍රී ලංකාවේ නැගෙනහිර පලාතේ සිදුවීඇති මිනිස් ඝාතන සහ මිනිස් අයිතිවාසිකම් උල්ලංගනය කිරීම , දකුණු සහ උතුරු ප්‍රදේශ තරමට පිටස්තර ලෝකයට පිළිබිඹුවී නැත. මේ හේතුව නිසා එක් අතකින් ශ්‍රීලංකා රජයේ දේශානුරාගික බලපෑම් නොකඩවා කරගෙනයෑමට ඉඩකඩ සැලසී ඇත.

13.06.91 දින කොක්කඩිචෝලෙයි ග්‍රාමයේ සිදුවුනු මේ භයානක මිනිස් ඝාතනයට හේතුවී තිබෙන්නේ කොටි සංවිධානයේ බිම්බෝම්බයකින් හමුදාභටයින් 3 දෙනෙක් මරණයට පත්වීමයි.මෙයට පලිගැනීමක් වශයෙන් , ලේපිපාසිත ශ්‍රී ලංකා හමුදාව අහිංසක ගම්වාසීන් 185දෙනෙක් අමු අමුවේම මරාදමා ඇත.

තම නිවෙස්වල එදිනෙදා වැඩකරමින් සිටි අය , පාසැල් සිසුන් , කාර්යාලීය සේවකයින් සහ පාරේ ගමන් කරමින් සිටි මගියින්ද කැතිවලින් කොටා, වෙඩිතබා, අමුඅමුවේ මරා දමා ඇත්තේ හුදෙක්ම මේ අය දෙමළ ජනයා වූනිසාමය. මරණ භයින් වීමෝලක සැගවී සිටි දෙමළගම් වැසියන් පිරිසක් වෙඩිතබා මරා දමා ඇත. හමුදා භටයින් විසින් පාසල් ගුරුවරියන් සහ ශිෂ්‍යාවන් දූෂණය කර ඇත. මෙදින මරුමුවට පත් වූවන්ගෙන් අඩක් පමණ ස්ත්‍රීන් සහ ළමයින්ය.

තුවාල ලැබූවන්ට ප්‍රථමාධාර දීමට ගිය ජාත්‍යන්තර රතුකුරුස සමාගමේ නිලධාරීන්ට ඒ ස්ථානයට යෑම හමුදා භටයින් විසින් වලක්වා ඇත. මේ නිලධාරීන්ට එම ස්ථානයට යෑමට ඉඩදී ඇත්තේ දින 4කට පසුවය.

මරණයෙන් බේරුණු ගම්වාසීන් වෙත තුවක්කු එල්ල කොට , ඔවුන් ලවාම මෘර්ත ශරීර ගොඩ ගස්වා පුලුස්සවා ඇත. කොක්කඩිචෝලොයි, මහිලඩිතිව් සහ මුනෙක්කාඩු ආදීපෙදෙස් වල හිස් කබල් සහ ඇට සැකිලි තැන් තැන්වල දකින්ට හැකිවුනු බව ඒ පෙදෙස්වලට ගිය අය සියැසින් දුටු බව වාර්ථාවී ඇත. හමුදාව විසින් ගෙවල් 400කට වඩා විනාශකර දමා ඇත. මේ අතර කොල්ල කෑම්ද සිදුවී ඇත. මේ සිද්ධියට පසු විශාල ගණනක් අතුරු දහන් වී ඇත. මොවුන් ගේ ඉරණම ගැන හෝඩුවාවක් නැත. විශාල සංඛ්‍යාවක් කැලෑවල සැගවී ඇතැයි විශ්වාස කරනු ලැබේ.

මේ ඝාතනය පිලිබදව රජයේ නිවේදනයක මෙසේ සදහන්වී ඇත. "..... පනහක් පමණ දෙනා මරුමුවට පත්වී ඇත...... සමහරක් අතුරු දහන්වී ඇත.....මොවුන් පීවතුන් අතර සිටින්නටද ඉඩ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ඇත.... "

සිරිත් පරිදි ශ්‍රී ලංකා රජය, "ඇත්ත" වැසීමට බොරු හැලි ඇද බායි. නමුත් තැන්තැන් වල දකින්නට ඇති මිනිස් ඇට සැකිලි මෙ සිද්ධියෙ ඇත්ත තත්වය පිලිබිඹුකරයි.

මෙම සිද්ධිය ගැන සොයා බැලීමට ශ්‍රී ලංකා රජය විසින් කොමිසමක් පත් කොට ඇත. මෙය තවත් රැවටිල්ලකි. පසුගිය වසර 40තුල බලයට පත් රජයන් විසින් කොමිසම පත්කොට ඇත. ඒ සැම කොමිසමක්ම වාගේ රජයට වාසි ඇතිවන සේ වාර්ථා නිකුත් කර ඇත. නිදසුනක් වශයෙන් මෑත ඉතිහාසයේදි ශ්‍රී ලංකා රජය විසින් , ශ්‍රේශ්ඨාදිකරණය විසින් වරද කරුවකුලෙස ඔප්පු කරනු ලැබූ පොලිස්නිලධාරියකුට වන්දි සහ උසස් කිරීමක්ද සමග ආපසු වැඩට ගැනීම රජයේ "අවංකකම" මෙනවට පැහැදිලි කිරීමකි.

රටෙ සාමය නැවත ලබා ගැනීමට ප්‍රධාන බාධකයක්ව ඇත්තේ ශ්‍රී ලංකා රජයයි. එම නිසා "සාමයේ වෙස්මුහුණ" ගලවා දමා ප්‍රේමදාසගේ සැබෑ" කැතමුහුණ" එලිදරවකිරීම අත්‍යාවශ්‍යය.

## පළමුවන ප්‍රාදේශිය සංගමය බිහිවෙයි.

ජූලි මස7 වන ඉරිදා ස්ටුටගාර්ට නගරයේදි ශ්‍රී ලංකා සංගමයේ , ස්ටුටගාර්ටවාසී සාමාජිකයින් සහ ඔවුන්ගේ හිතවතුන් එකතුවීමෙන් ශ්‍රී ලංකා සංගමයේ ප්‍රාදේශිය ශාඛාවක් පිහිටුවා ගන්නා ලදි. සැම මසකම පළමුවන ඉරිදා සවස 18.00 පැයේ සිට 21.00 පැය දක්වා ඔවුන් මුනගැසී දූනහඳුනා ගැනීමට අවස්තාවක් ලැබී ඇත.

එම සංගමය පැවැත්වෙන ස්ථානය : "සල්ස්" බාරේ, වයිබ්ලින්ගන් පාර 59,7000 ස්ටුටගාර්ට 50.

ඊට අමතරව ජූලිමස 27වන දින , ශ්‍රී ලංකාව පිළිබඳ විස්තර ප්‍රචාරය කරනු ලබන "ඩියාස්" ඡායාරූප දර්ෂනයක් සහ ජාත්‍යන්තර ක්ෂමාආයතනයේ ශ්‍රී ලංකා නියෝජිතවරියගේ දේශනයකටද සවන් දීමට අවස්ථාව සලසයි.

ඒ පිලිබඳව වැඩිවිස්තර ප්‍රවෘර්ති පත්‍රයෙන් ලබාගත හැක.

## ශ්‍රී ලංකා සංගමයට තවත් වසරක් පිරෙයි.

1991 ජුනි මස 15 වන දින ස්ටුටගාර්ට නගරයේ , "සල්ස්" , වයිබ්ලින්ගන් පාරේ 59 දරන ස්ථානයේදි ශ්‍රී ලංකා සංගමය නැවත වරක් රැස්විය. එදින නවනිලධාරි මණ්ඩලයක් තේරීම ප්‍රධාන කරුන ලෙස සිදුවිය. ගතවූ වසරේ ආපසු බැලීමක් සහ අනාගතයට මීටවඩා දියුණු ආකාරයෙන් වැඩකටයුතු කරගෙන යාහැකි මාර්ගයන් ගැන එහිදි සාකච්චාවට භාජනය විය.

ශ්‍රී ලංකා සංගමය මගින් පළකරන ප්‍රවෘති ලිපිය දිගටම කරගෙන යාමට මෙදින රැස්වීමේදි සම්මත විය. ශ්‍රී ලංකාවෙ වර්තමාන සැබෑ තත්වය අවබෝධ කරවීමට සැබෑ ප්‍රවෘති පළවිය යුතුබවද තිරණය විය. එම පත්‍රිකාව සිංහල, දෙමළ සහ ජර්මන් යන භාෂාමාධ්‍යයන් ගෙන් පලවනු ඇත.

ඊට අමතරව ප්‍රාදේශිය සංගම පිහිටුවීමෙන් ප්‍රධාන සංගමයේ ක්‍රියාවන් ඉදිරියට කාර්යක්ෂමව කරගෙන යෑමට හැකි අවස්ථාවන් පැහැදිලිවිය. ඒ අනුව මියුනික් , ස්ටුටගාර්ට , ඩොර්ට්මුන්ඩ සහ ෆැරුන්ක් ෆර්ට යන නගරවල මූලික ප්‍රාදේශිය සංගම කලුප්ලිය වෙතුවෙන් ප්‍රචාරක වැඩසටහන් ඉදිරිපත් කිරිමට යෝජනාවිය.

සම්තිය මගින් ගන්නා ලද තවත් වැදගත් පියවරක් වූ දේශපාලන රැකාවරන පතා ජර්මනිය වෙසෙන ශ්‍රී ලාංකිකයන් ආපසු සිය රටට බලයෙන් යැවීමට විරුද්ධව පෙත්සම ව්‍යාපාරයක් ගෙනයෑමට ක්‍රියාකිරීම ඉතාමත් කාලෝචිත දෙයක් ලෙස පැවසිය යුතුය.

මීලග සම්ති වාරය මියුනිච නගරයේදී සමුලුවක් ලෙස දින 2ක කාලයක්තුල පැවැත් වීමට කටයුතු කරගෙන යනු ඇත. එය ඔක්තොබර් මස පැවැත්වීමට දූනට තීරනය කර ඇත.

කලාපයක මිල - DM 1 යි.
තැපැල් ගාස්තු - DM 0.60 යි
ලබාගත හැකි ස්ථානය -

SRILANKA VEREIN
Daiserstr. 9,
8000 München 70



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் படுகொலை

## கொக்கட்டிச்சோலையில் ராணுவத்தின் வெறியாட்டம்.

*அஹிம்சை வழியிலேயே போவோம். பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தை மூலமே தீர்ப்போம். ஆயுதங்களில் எனக்கு நம்பிக்கையில்லை..."*

*"இப்போது நடைபெறும் யுத்தம் தமிழ்மக்களுக்கு எதிரானதல்ல; புலிகளுக்கு எதிரானதே..."*

மேலேயுள்ளவை இலங்கை ஜனாதிபதி பிரேமதாசவால் பொதுக்கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் அடிக்கடி சொல்லப்படும் வார்த்தைகளாகும். எனினும் இதற்கு நேர் எதிர்மாறாகவே இலங்கையரசு நடந்துகொள்கிறது என்பது தொடர்ச்சியான பல அரச பயங்கரவாதச் செயல்கள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது. இவற்றில் ஒன்றுதான் அண்மையில் கொக்கட்டிச்சோலையில் நடந்த அப்பாவி மக்கள் படுகொலைச் சம்பவமாகும்.

தமிழர்கள், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமான கிழக்கு மாகாணத்தை வடக்கிலிருந்து துண்டாடுவதற்காகவும், இப்பிரதேசங்களில் வாழும் பெரும்பான்மையினரை சிறுபான்மையினராக்கவும் பல வருடங்களாகச் சிங்களக் குடியேற்றங்கள் இலங்கையரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக் குடியேற்றத்திட்டத்தின் ஒரு பகுதியாகவும், தமிழின அழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவுமே கிழக்கு மாகாணம் இலங்கையரசின் பிரதான தாக்குதல் இலக்குகளில் ஒன்றாக இருந்து வருகிறது. ஆரம்ப காலங்களிலிருந்தே இப்பிரதேசத்தில் தமிழர்களைக் கொன்றும், அகதிகளாகத் துரத்தியடித்தும் கிழக்கு மாகாணத்தை கைப்பற்றுவதில் இலங்கையரசு தொடர்ந்து முன்னேறிவருகிறது.

வடபகுதியைப் போன்றோ, தென்பகுதியைப் போன்றோ அல்லாது கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் என்பன வெளியுலகுக்குத் தெரியவருவது மிகவும் குறைவாகவே இருப்பது இலங்கையரசின் இனவாத நடவடிக்கைகளுக்கு இன்னும் உதவியாக இருக்கிறது.

இலங்கையரசின் தொடர்ச்சியான இன ஒழிபபு நடவடிக்கையில் ஒன்றாக இடம்பெற்றதே 13.06.91 இல் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளாகும்.

புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி 3 இராணுவத்தினர் உயிரிழந்ததைக் காரணமாக வைத்துக்கொணடு, இரத்த வெறி பிடித்த இராணுவம் சுமார் 185க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் பொதுமக்களை கொன்று குவித்துவிட்டது.

வீட்டில் தங்கள் அன்றாட வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களும், பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களும், வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும், தெருவில் போய்க் கொண்டிருந்தவர்களும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக இலங்கையரசின் இராணுவத்தால் துப்பாக்கியால் சுடப்பட்டும், கத்தியால் வெட்டப்பட்டும், உயிருடன் நெருப்பு வைக்கப்பட்டும் துடிதுடிக்கக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இராணுவ கொலைவெறிக்கு அஞ்சி அரிசி ஆலையொன்றுக்குள் ஒளிந்து கொண்ட பொதுமக்களை அங்கேயே சுட்டுத் தள்ளியது இராணுவம். பாடசாலை ஆசிரியைகள் மீதும், மாணவிகள் மீதும் இராணுவத்தால் பாலியல் வன்முறை மேற்கொள்ளப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்களும் குழந்தைகளுமாவர்.

இராணுவத்தின் தாக்குதல்களால் படுகாயமுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சையளிக்கச் சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இராணுவத்தால் அங்கு போகவிடாமல் தடுக்கப்பட்டது. சம்பவம் நடந்த 4 நாட்களின் பின்னரே சம்பவம் நடந்த இடங்களுக்குப் போக சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த இடைக்காலத்தில் உயிர்தப்பியிருந்த பொதுமக்களைக் கொண்டே இராணுவம் கொல்லப்பட்ட உடல்களை அப்புறப்படுத்தியது. பிணங்கள் யாவும் ஒன்றாக குவிக்கப்பட்டு, தீ மூட்டிக் கொளுத்தும்படி மக்கள் இராணுவத்தால் ஆயுத முனையில் பணிக்கப்பட்டனர்.

கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, முனைக்காடு ஆகிய பகுதிகள் எங்கும் மனித மண்டையோடுகளும், எலும்புக்கூடுகளும் காணப்பட்டதாக இப்பிரதேசங்களை நேரில் சென்று பார்த்தவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 400க்கு மேற்பட்ட வீடுகள் அரசபடைகளால் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளன. பொது மக்களின் உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

இப்படுகொலைச் சம்பவத்தின் போது பல தமிழர்கள் காணமற் போயுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என இதுவரை தெரியவரவில்லை. உயர் தப்பிய பலர் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இப்படுகொலைச்சம்பவம் பற்றி இலங்கையரசு வெளியிட்ட அறிக்கையில் "50க்கு குறைவானவர்களே கொல்லப்பட்டிருக்கலாம். ஏனையோரைக் காணவில்லை. அவர்கள் உயிருடனிருக்கலாம்" என்று வழமை போல் பொய், புரட்டுகளை எழுதி உண்மைகளை அப்பட்டமாக மறைத்துள்ளது. அத்துடன் ஒரு கண் துடைப்பாக இப் படுகொலைச் சம்பவத்தை விசாரிக்க ஆணைக்குழுவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக, இப்படி எத்தனையோ ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டதும், அவைகள் அரசு சார்பு அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு முடங்கிக் கொண்டதும் இலங்கை வரலாறாகும். உயர்நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒரு பொலிஸ்காரரின் அபராதத் தொகையையும் கட்டி, அக்குற்றவாளிக்கு பதவியுயர்வும் கொடுத்து கௌரவித்த இலங்கையரசின் 'நேர்மையை' பலரும் அறிவர்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களை நிறுத்துவதற்கும், சமாதானத்தை, அமைதியை ஏற்படுத்தவும், அனைத்து இனங்களுக்கும் சம உரிமை கிடைக்கவும் தடையாக இருக்கும் பிரதான எதிரி என்றும் இலங்கையரசே. பிரேமதாசவின் சமாதான வேஷங்களை இனங்கண்டு இலங்கையரசை உலக அரங்கில் அம்பலப்படுத்த வேண்டும்.

(தகவல்கள்: வீரகேசரி ,ஜலண்ட், மனித உரிமைச் சங்கங்களின் அறிக்கைகள்)

## இலங்கையர் சங்கம் - வருடாந்தப் பொதுக் கூட்டம்

1991ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி ஸ்ருட்காட் நகரில் இலங்கையர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அக் கூட்டத்தில் புதிய வருடத்திற்கான செயற் குழுதெரிவு செய்யப்பட்டது.

கடந்த வருடங்களின் நடவடிக்கைகள் விமர்சனத்துள்ளாக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மத்தியில் தொடர்புகளை பலப்படுத்தவும், இலங்கையில் நிகழும் உண்மை சம்பவங்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் முகமாகவும் தமிழ், சிங்களம், ஜேர்மன் ஆகிய மொழிகளில் செய்திக் குறிப்புக்கள் இலங்கையர் சங்கத்தின் செயதியுடன் இணைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

பிரதேசரீதியாக இலங்கையர் சங்க அங்கத்தவர்களைக் கொண்ட பிரதேசக்குழுக்கள் அமைக்கப்பட்டு அப்பிரதேசத்தின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும், ஜூலை மாதத்தில் "கறுப்பு ஜூலை" தொடர்பான நிகழ்ச்சிகளை ஸ்ருட்காட், பிராங்ப்பர்ட்,முன்சன், டோற்முணட் மற்றும் ஏனைய நகரங்களிலும் இலங்கையின் தற்போதைய நிலவரங்ளைத் தெரிவிக்கும் நிகழ்ச்சிகளாக நடத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதை எதிர்க்கும் மனுவில் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டு ஜேர்மன் உள்நாட்டு அமைச்சருக்கு அனுப்ப வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையர் சங்கத்தின் அடுத்த பொதுக் கூட்டம் ஒரு கருத்தரங்குடன் செப்டம்பர் - ஒக்டோபர் மாதங்களில் நடைபெறவுள்ளது.

தனிப்பிரதி 1.DM
தபாற் செலவு 60 Pf.

கிடைக்குமிடம்

SRILANKA VEREIN
Daiserstr 9
8000 München 70



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Forts. von. S.1.

Hilfe leisten wollten, wurden von den Soldaten gehindert, in die

Dörfer zu gehen. Erst nach 4 tagen erlaubte man ihnen, in die Dörfer zu gehen. In dieser Zeit wurden die Einwohner des Dorfes, die das Massaker überlebten, von der Armee gezwungen, die toten Körper zu beseitigen. Die Leichen wurden zu einem Haufen aufgeschichtet und verbrannt.
Augenzeugen, die die Orte Kokodichcholai, Mahiladiththivu und Munaikkadu besuchten, berichten, daß überall Schädel und Skelette zu sehen waren. Über Vierhundert Häuser wurden durch die staatlichen Kräfte zerstört und geplündert.
Viele Tamilen werden seit diesem Massaker vermißt. Ihre Situation ist immer noch ungewiß. Viele, die dem Tod entfliehen konnten, wurden später im Dschngel aufgefunden.
Die srilankische Regierung gab zu dem Massaker folgende Erklärung ab: "...weniger als 50 personen wurden getötet, die anderen werden vermißt. Sie sind vielleicht am leben."
Wie gewöhnlich versucht die srilankanische Regierung, die Wahrheit zu verdecken. Unglücklicherweise waren zu viele Skelette zu verstecken! Als weitere Augenwischerei wurde eine Kommision von der Regierung eingesetzt, um das Massaker zu untersuchen. In den letzten 40 Jahren wurden einige Kommisionen durch die Regierung gebildet, und wie die Geschichte gezeigt hat, haben sie immer zugunsten der Regierung berichtet.
Die srilananische Regierung beförderte einen Polizisten, der vom obersten Gerichtshof nach den Gesetzen des Landes für schuldig befunden wurde, und zahlte dessen Geldstrafe. Jeder kennt die "Ehrlichkeit" dieser Regierung.
Die srilankanische Regierung ist das Hindernis, das die Rückkehr von Ruhe und Frieden auf die Insel verhindert. Deshalb ist es notwendig, dem srilankanischen Präsidenten Premadasa die falsche Maske des "Friedens" herunterzureissen und sein "schlimmes" Gesicht der Welt offenzulegen.

## DER SRI LANKA VEREIN IST WIEDER EIN JAHR ÄLTER GEWORDEN

Am 15. Juni 1991 fand in Stuttgart im SALZ die Mitgliederversammlung statt. Es wurde über Aktivitäten des vergangenen Jahres berichtet sowie ein Ausblick auf das kommende Geschäftsjahr gegeben.
Hauptanliegen des Sri Lanka Vereins ist, daß alle in Deutschland lebenden srilankanischen Bürger miteinander Kontakt aufnehmen austauschen können. Diese Informationen sollen den Mitgliedern durch einen Rundbrief zukommen. Dieser Rundbrief wird in den Sprachen singhalesisch, tamilisch und deutsch erscheinen.
Damit die Arbeit sich nicht auf einen Ort konzentriert, sollen in den einzelnen Städten Ortsgruppen gebildet werden. Die ersten Ortsgroupen werden in München, Stuttgart, Frankfurt und Dortmund gegründet. Aufgabe der Ortsgruppe ist, die Bevölkerung vor Ort über die aktuelle Situation auf Sri Lanka zu informieren.
Für den Monat Juli hat der Verein eine bundesweite Unterschriftenaktion gegen die Abschiebung von srilankanischen Asylbewerbern beschlossen.
Das nächste Treffen des Sri Lanka Vereins ist in München im Rahmen eines Seminars im Oktober '91 geplant.

*Erstes Treffen der Stuttgerter Ortsgruppe am 7 . Juli im SALZ*

***Wir treffen uns an jedem ertsten Sonntag im Monat von 18.00 - 21.00 im SALZ. Waiblinger straße 59, 7 Stuttgart 50.***
***Am 27. Juli veranstaltet wir eine Informationveranstaltung zur aktuellen Lage auf SRI LANKA (vgl. Flugblatt).***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

From page 8

no doubt that resort to retaliatory violence by the forces of the state, whatever the provocation from cruel and extremist opposition violence, whether this be in the North or the South, only makes more inexorable the foundations for a peaceful and democratic society in which people of all communities are secure.

One of the main causes of such tragedies is the impunity enjoyed by wrongdoers when they happen to belong to the state.

CRM hopes that the enormity of the events in Kokkaddicholai will at least result in serious consideration of these factors, and effective action to prevent repetition of such tragedies in the future.

In conclusion CRM draws once again attention to example of the Human Rights Agreement entered into by the government and the violent opposition of El Salvador, with UN mediation. This demonstrates dramatically that it is not impractical to try to secure human rights in times of the most bitter armed conflict.

---

## ஸ்ருட்காட் இலங்கையர் சங்க பிராந்தியக் குழுவின் தோற்றம்!

ஸ்ருட்காட் நகரில் இலங்கையர் சங்க அங்கத்தவர்களும் நண்பர்களும் இணைந்த பிராந்தியக் குழுவொன்று ஜுலைமாதம் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைகளில் 18 மணியிலிருந்து 21 மணி வரை அனைவரும் சந்தித்து கருத்துப் பரிமாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

பிராந்தியக் குழு கூடுமிடம்:

SALZ, Waiblingerstr. 59,7 Stuttgart 50

## கறுப்பு ஜுலை

ஜுலை 27ம் திகதி ஸ்ருட்காட் பிராந்தியக் குழு இலங்கையின் தற்போதைய நிலமைகளை விளக்கும் விவரணப்பட நிகழ்வொன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

இது பற்றிய மேலதிக விபரங்களைத் துண்டுப்பிரசுரத்தில் பார்க்கவும்.

நதைபெறும் திகதி: 27.07.91

இடம்:Charlottenstr. 38, 7000 Stuttgart 1.

* ich abonniere den Rundbrief für 1.60 DM pro Ausgabe.
* ich bestelle Rundbrief No:....
* ich bitte um Zusendung von ..... Probeexemplare ( DM..... in Briefmarken liegen bei)
* ich mChchte Mitglied werden schicket mir eine Beitrittserklärung.
* mich interessiert die Mitarbeit in der Redaktion

einsenden an SRI LANKA VEREIN:

Name:

adresse:

Datum:

Unterschrift:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்